[2023 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

89—

மகளிர் கலைக் கல்லூரி

***11972—திரு. K. மாரிமுத்து:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை அருள்மிகு பெரியநாயகி அம்மன் பெண்கள் மேல்நிலைப் பள்ளியுடன் இணைந்து மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மந்திரபுரீஸ்வரர் அருள்மிகு பெரியநாயகி அம்மன் திருக்கோயில் சார்பிலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற அந்தப் பள்ளியில், 1,064 மாணவச் செல்வங்கள் பயின்று வருகின்றனர். அந்தத் திருக்கோயிலுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களால், 2021–2022 ஆம் ஆண்டு 2 கோடியே 78 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிகள் மற்றும் இதர பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இன்னும் கூடுதலாக 4 வகுப்பறைகள் அந்தப் பள்ளியின் சார்பில் கேட்கப்பட்டதைத் தொடர்ந்து, ரூ.66 இலட்சம் செலவில் அந்தப் பணிகளும் மேற்கொள்ள கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி மகளிர் கலைக் கல்லூரியைப் பொறுத்தளவில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 2021 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 10 கல்லூரிகள் அமைக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது. அதில் 4 கல்லூரிகள் 2–11–2021 ஆம் ஆண்டு தற்காலிகக் கொட்டகையில் தொடங்கப்பட்டன. நல்மனம் கொண்டோர் பலர் இப்படி கல்லூரிகள் செயல்பாட்டிற்கு வந்துவிட்டால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத் துறைக்கும் நற்பெயர் வந்துவிடும் என்பதற்காக நீதிமன்றங்களில் பல்வேறு கோணங்களில் வழக்குகளைத் தொடுத்திருக்கின்றார்கள்.

2023 மார்ச் 31]

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீண்டதொரு சட்டப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறார். இந்த 4 கல்லூரிகள் செயல்படுவதற்கு தடையேதும் இல்லையென்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தும்கூட, அதையும் தடை செய்ய வேண்டுமென்று நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்றார்கள். இந்த 4+6 கல்லூரிகளுடைய சட்டப் போராட்டத்தில் உறுதியாக வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு தொடர்ந்து கொண்டிருக்கின்றோம். இதில், வெற்றி கிட்டிய பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பெரியநாயகி அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான பள்ளி அமைந்துள்ள 4.82 ஏக்கரில் கல்லூரி தொடங்குவது குறித்து சாத்தியக் கூறுகள் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.*

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் என்றாலும், நான் தமிழ்நாடு அரசிற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் தொகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான முத்துப்பேட்டையை தனி வட்டமாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கை ஏற்கப்பட்டு, வருகிற 6–4–2023 ஆம் நாளன்று தமிழ்நாட்டின் தன்னிகரில்லா தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைக்க இருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) அவர்களுக்கு. . .*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்விக்கு வாருங்கள். (குறுக்கீடுகள்) சரி, முடியுங்கள். பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. K. மாரிமுத்து: *தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகின்ற 6–4–2023 அன்று காலை 9–45 மணிக்கு காணொளிக் காட்சியின் மூலமாகச் செயல்படுத்த இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக, தொகுதி மக்களின் சார்பில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், தமிழ்நாடு அரசுக்கும், தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த்*

துறை அமைச்சர் அவர்களுக்கும் கோடானு கோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியத்தில் பெரியநாயகி அம்மன் பெண்கள் மேல்நிலைப் பள்ளியோடு சேர்த்து 14 அரசு மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அங்கே இருக்கிற ஏழை விவசாயிகளும், எளிய தொழிலாளர்களும், பின்தங்கி இருக்கிற மீனவப் பெருமக்களும், இஸ்லாமியப் பெருமக்களுடைய பிள்ளைகளும் கற்கும் கல்விக்கு அதுதான் அடித்தளமாக இருக்கிறது. ஆனாலும், உயர் கல்வி என்று வருகிறபோது உயர் கல்வி கற்க கட்டமைப்பு இல்லாத சூழ்நிலையில், அவர்கள் முத்துப்பேட்டையிலிருந்து கிட்டத்தட்ட 45 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிற தஞ்சாவூருக்கும், அதிராம்பட்டினத்திற்கும், மன்னார்குடிக்கும், வேதாரண்யத்திற்கும் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதனைக் கருத்திற்கொண்டு, இந்து சமய அறநிலையத் துறை, கோயில் நிலங்களிலும், மடங்களின் பண்ணைகளிலும் இரத்தத்தையே வேர்வையாக்கிய தொகுதி மக்கள் சட்டப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிற தமிழ்நாடு அரசை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். பக்தியோடு, பரவசத்தோடு நின்று தொகுதி மக்கள் கேட்கிறார்கள்; தொகுதி மக்களுடைய பெண் குழந்தைகளுடைய எதிர்காலக் கல்வி நலனிற்கு, இல்லை என்று சொல்லாமல், சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்து கொடுக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், மகளிர் கலைக் கல்லூரி அமைத்துக் கொடுப்பதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளாமல் கொடுக்கின்ற மனது, கேட்டதெல்லாம் தருகின்ற குணம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சியில், இன்னார் இனியவர் என்றில்லாமல், வாய்ப்புகள் இருக்கின்ற பணிகளையெல்லாம் நிறைவேற்றித் தர வேண்டுமென்றுதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எங்களைப் போன்ற அமைச்சர்களுக்கு உத்தரவிட்டிருக்கின்றார். தங்களுடைய கோரிக்கைக்கு நான்

2023 மார்ச் 31]

இல்லை என்று முற்றுப்புள்ளி வைக்கவில்லை, கமாதான் வைத்திருக்கின்றேன். சட்டப் போராட்டத்தில் வெற்றி பெற்ற பிறகு, உங்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மீண்டும் ஒருமுறை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.*

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பில் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, திருத்துறைப்பூண்டியில் அருள்பாலித்துக் கொண்டிருக்கிற பிறவி மருந்தீஸ்வரர் கோயிலுக்கு குடமுழுக்கு விழா நடத்துவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, கோட்டூரில் இருக்கிற கொழுந்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருத்தேர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு ஏற்கெனவே 1.28 கோடி ரூபாய் செலவிலே திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, வருகின்ற 28–6–2023 அன்று குடமுழுக்கு நடத்துவதற்கு நாள் குறிக்கப்பட்டிருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொழுந்தீஸ்வரர் திருக்கோயிலுக்குத் திருத்தேர் வேண்டுமென்று கேட்டார். 50 ஆண்டுகளுக்கு முன்பு உற்சவத்தன்று திருத்தேர் ஓடியதாக குறிப்பிலே இருக்கின்றது. 50 ஆண்டுகளில் திருத்தேர் ஓடுகின்ற பாதையில் பல ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டுள்ளன. எனவே, ஏற்கெனவே இருந்த அளவிற்கு திருத்தேர் செய்தாலும், தேர் வலம் வருகின்ற சூழ்நிலை இல்லாததால், தொல்லியல் துறையைச் சார்ந்த வல்லுநர்களை அனுப்பி, இருக்கின்ற பாதைக்கேற்றாற்போல், எந்த அளவிலே திருத்தேர் செய்ய முடியுமோ அதற்குண்டான வடிவமைப்பை ஏற்படுத்தி, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை நிறைவேற்றுவோம்.*

[2023 மார்ச் 31

முற்பகல் 11–05

முதலில் கேட்ட மருந்தீஸ்வரர் கோயில், அதன்பிறகு கேட்ட முத்துப்பேட்டை பெரியநாயகியம்மன் கோயில், அதன்பிறகு கேட்ட கொழுந்தீஸ்வரர் கோயில், இந்த 3 கோயில்களுக்கான கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தொலைநோக்குப் பார்வையில் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழமையான கோயில்களில் போதுமான வருவாய் இல்லாத சூழ்நிலையை அறிந்து, 2022–2023 ஆம் ஆண்டு 100 கோடி ரூபாயை ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோயில்களைப் புனரமைப்பதற்கு தமிழக அரசின் சார்பில் முதன்முதலில் நிதி ஒதுக்கிய பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களையே சாரும். அந்த 100 கோடி ரூபாயில், நீங்கள் குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்கிறோம். 47 திருக்கோயில்களில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ஓராண்டுக்குள் நிறைவேற்றப்பட்டு, மீதமிருக்கின்ற 509 திருக்கோயில்கள் எவையென கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றன. படிப்படியாக ஆண்டுதோறும் இந்தத் திருக்கோயில்கள் அனைத்தும் புனரமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. மு. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, திருவெண்காட்டில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின்கீழ் நிறைய இடம் இருக்கிறது. அங்கு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளில் இட வசதி இருக்கிறது. பெண்கள் அதிகமாகப் படிக்கின்ற வாய்ப்பு, நமது திராவிட மாடல் ஆட்சியில்தான் உருவாகியிருக்கிறது என்று ஒரு புள்ளிவிவரத்தில் சொல்லியிருக்கின்றார்கள். அமெரிக்காவைவிட தமிழகத்தில்தான் அதிகமாக பெண்கள் உயர் கல்வி பெறுகிறார்கள் என்றுகூட அந்தப் புள்ளிவிவரத்தில் சொல்லியிருக்கின்றார்கள். எனவே, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின்கீழ் இயங்கும் அந்தப் பள்ளியில் நிறைய இடம் இருக்கின்ற காரணத்தினால், அங்கு ஒரு மகளிர் கலைக் கல்லூரியை உருவாக்கித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2023 மார்ச் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெண்காடு பகுதியில் இருக்கின்ற மேல்நிலைப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார். பூம்புகார் கல்லூரிக்குக் கூடுதல் வகுப்பறைகள் வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று, சுமார் 4 கோடி ரூபாய் செலவில், 24 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. கல்லூரி கேட்கின்ற இடங்களில் எல்லாம் உறுப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஆசை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இருந்தாலும், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்குரிய பதிலைத்தான் இவருக்கும் கூற வேண்டும். நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்கு முடிவிற்கு வந்த பிறகு, எந்தெந்த இடங்களில் எல்லாம் கல்லூரிகள் தேவைப்படுகின்றன என்பதற்கு, அந்தத் திருக்கோயிலுக்குண்டான நிதி வசதியைப் பொறுத்து, ஆய்வு செய்து, அந்த இடங்களில் கல்லூரிகள் அமைப்பதற்குண்டான முயற்சிகளை இந்து சமய அறநிலையத் துறை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பொதுச் செயலாளர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். மேலூர் தொகுதி, அழகர்கோயில் அருள்மிகு சுந்தரராஜா உயர்நிலைப் பள்ளியுடன் இணைத்து அங்கு பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 27 பள்ளிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு முதல் பள்ளிக் கல்வித் துறை அந்தப் பள்ளிகளுடைய நிருவாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். பள்ளிக் கல்வித் துறை எந்த வகையில், தங்களுடைய செயல்பாடுகளை இந்தப் பள்ளிகளில் ஏற்றுக்கொள்ள இருக்கின்றது என்பதைக் கருத்தில்கொண்டு, மேலூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் கோரிய சுந்தரராஜ பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் பள்ளியினுடைய கட்டமைப்பை உயர்த்துவது குறித்து மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து, நல்லதொரு தீர்வு காணப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

90—

சார்நிலைக் கருவூலம்

***77924—திரு. க.சொ.க. கண்ணன்:**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடம் வட்டத்திற்கு சார்நிலைக் கருவூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடத்திற்கு புதிய சார்நிலைக் கருவூலம் அமைப்பது தொடர்பாக கருவூலக்